**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்**

**சார்பு நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை திருமதி.எஸ். தங்கமணி, எம்.ஏ., எம்.எல்.,**

**முன்னிலை அலுவலர்/சார்பு நீதிபதி, நாமக்கல்**

**2026– ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மோட்டர் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை**

**முதலேற்பு மனு எண்.1264/2024(CNR No.TNNM1D-0025932024)**

**மற்றும்**

**முதலேற்பு மனு எண்.1265/2024 (CNR No.TNNM1D-0025952024)**

1.P.சாந்தி(46), க/பெ.லேட்.பழனிசாமி,
எண்.2/127A, அருந்ததியார் தெரு,
காதப்பள்ளி, நாமக்கல் மாவட்டம். ... மனு எண்.1264/2024,
ன் மனுதாரர்

1.P.சாந்தி(46), க/பெ.லேட்.பழனிசாமி,
2.P.புனிதா(27), த/பெ.லேட்.பழனிசாமி,
3.P.பூர்ணிமா(26), த/பெ.லேட்.பழனிசாமி,
4.P.பூவரசன்(23), த/பெ.லேட்.பழனிசாமி,
5.M.அருக்காணி(76), க/பெ.முத்தான்,
எண்.2/127A, எண்.2/103,எண்.4/7C,
எண்.2/103, எண்.2/127, அருந்ததியார் தெரு,
காதப்பள்ளி, நாமக்கல் மாவட்டம். ... மனு எண்.1265/2024,
ன் மனுதாரர்

/ எதிராக/

1.S.சந்திரமோகன், த/பெ, K.சுந்தரம்,
எண்.1/35, ஓடப்ப தோட்டம்,
ரங்கப்பநாயக்கன்பாளையம்,
எர்ணாபுரம் அஞ்சல், போதுப்பட்டி,
நாமக்கல்.
2.M/S SBI ஜெனரல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிட்டெட்,
எண்.2/1, 1ம் தளம், G.V டவர்ஸ்,
திருச்சி மெயின்ரோடு, தடகப்பட்டி,
ராஜா சபரி தியேட்டர் அருகில்,
குகை, சேலம். ...எதிர்மனுதாரர்கள்

இம்மனுக்கள் இரண்டும் முதன் முதலில் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எம்.சி.ஓபி எண்.174/2024 (1264/2024),

எம்.சி.ஓபி எண்.175/2024 (1265/2024) ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இரண்டு மனுக்களும் மாண்புமிகு உயர்நீதிமன்ற ROC No.56446/2020/G Dt. 18.12.2024ன் படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக மாறுதலாக வரப்பெற்று எம்.சி.ஓபி எண்.1264/2024, 1265/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மனுக்களும் என் முன்பு 15.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்ததில் இந்த இரண்டு மனுக்களிலும் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.N.தனலட்சுமி அவர்கள் முன்னிலையாகியும், 2 மனுக்களிலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.A.பூங்குழலி அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து பிறகு எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராகக்கப்பட்டும், 2 மனுக்களிலும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜவேல் அவர்கள் ஆஜராகியும், 2 மனுதாரர்களும் ஓரே சாலை விபத்தில் காயமடைந்தவர்கள் என்பதால் இரண்டு மனுக்களையும் ஒன்றாக சேர்த்து நடத்தக்கோரி கூட்டுக்குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதன் அடிப்படையில் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எம்.சி.ஓ.பி.எண்.1265/2024 ல் பொதுவான சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டு கூட்டு விசாரணை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான உத்தரவு

இந்த இரண்டு மனுக்களின் மனுதாரர்கள் மேற்படி விபத்தில் மனுதாரர் சாந்தி என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், பழனிசாமி என்பவர் இறந்ததற்கும் அவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் மனுதாரர்கள் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்ட பிரிவு 166ன் கீழ் கடந்த 27.08.2024 அன்று இரண்டு மனுக்களையும் தாக்கல் செய்துள்ளனர்.

| | |
|---|---|
| விபத்து நடைபெற்ற நாள் | 25.06.2023 |
| மனு தாக்கல் செய்த நாள் | 27.08.2024 |

**2. இரண்டு மனுக்களின் பொதுவான சுருக்கம்**

இந்த இரண்டு மனுக்களிலும் சொல்லப்பட்டுள்ள மனுதாரர்கள் சாந்தி மற்றும் இறந்த பழனிச்சாமி இருவரும் கணவன் மனைவி ஆவார்கள். மேற்படி இருவரும் ஒரே சாலை விபத்தில் காயம் அடைந்துள்ளனர். மனுதாரர்கள் இருவரும் கடந்த 25.06.2023ம் தேதி மாலை சுமார் 05.45 மணியளவில் கீரம்பூர் – எர்ணாபுரம் மெயின் ரோடு, ரங்கப்பநாயக்கன்பாளையம், பிள்ளையார் கோவில் வளைவு அருகில், TN 28 BD 9997என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை விபத்தில் இறந்த பழனிசாமி என்பவர் ஓட்ட அவரது மனைவியான மனுதாரர் சாந்தி பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தபோது, எதிர்திசையில் வந்த TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநரின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும்.

மேற்படி விபத்தில் எம்.சி.ஓபி.எண்.1264/2024ன் மனுதாரர் சாந்தி மற்றும் எம்.சி.ஓபி.எண்.1265/2024ன் குறிப்பிட்டுள்ள விபத்தில் இறந்த பழனிசாமிக்கும் தலை, இரண்டு கால்கள், இரண்டு கைகள், நெஞ்சு, இடுப்பு பகுதி மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுவிட்டது. விபத்திற்கு பின்னிட்டு எம்.சி.ஓபி.எண்.1264/2024ன் மனுதாரர் சாந்திக்கு நாமக்கல் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டும் பின்னர் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டும் பின்னர் மேல்சிகிச்சைக்காக நாமக்கல் ஸ்ரீ அக்சயா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்தில் எம்.சி.ஓபி.எண்.1265/2024ன் மனுவில் குறிப்பிட்டுள்ள பழனிசாமி நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். பழனிசாமியின் உடல் நாமக்கல் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

மேற்படி விபத்து தொடர்பாக நல்லிபாளையம் காவல் நிலையத்தில் குற்ற எண். 146/2023, இ.த.ச.பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் விபத்து ஏற்படுத்திய TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எம்.சி.ஓபி.எண்.1265/2024ல் விபத்தில் இறந்த பழனிசாமி விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/– வரை சம்பாதித்து தன்னை சார்ந்து இருந்த மனுதாரர்களை காப்பாற்றி வந்துள்ளார். தற்போது அவர் இறந்து விட்ட காரணத்தினால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ள மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை ரூ.20,00,000/–மும் எம்.சி.ஓபி.எண்.1264/2024ன் மனுதாரர் சாந்தி விவசாய கூலி ஆக வேலை செய்து மாதம் ரூ.15,000/– வரை சம்பாதித்து தன்னை சார்ந்து இருந்த மனுதாரர்களை காப்பாற்றி நிலையில் விபத்திற்கு முன்புபோல் மனுதாரர் சாந்திக்கு அவரின் அன்றாட வேலைகளை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மனுதாரரின் வலி மற்றும் துன்பம் எதிர்கால வருமான இழப்பு, ஊட்ட சத்து உணவு, எதிர்கால மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு மற்றும் மன உளைச்சல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர் சாந்திக்கு இழப்பீடாக ரூ.15,00,000/–மும், இழப்பீடாக 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வழக்குக்கோப்பை பார்வையிட்டதில் 2 மனுக்களிலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.A.பூங்குழலி அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து பிறகு எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராகக்கப்பட்டுள்ளார்.

**4. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2 மனுக்களிலும் தாக்கல் செய்துள்ள எதிருரைகளின் பொதுவான சாராம்சம்.**

மனுதாரர்கள் தங்களது மனுக்களில் சொல்லியுள்ள பொருண்மைகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது, இந்த எதிர்மனுதாரரால் எதிருரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க

வேண்டும் எனவும், மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல, மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் மனுதாரர்களே சாட்சிய மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

விபத்தானது TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் காரை மெதுவாகவும், கவனமாகவும், சாலைவிதிகளை பின்பற்றியும் ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்தபோது TN 28 BD 9997என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை விபத்தில் இறந்த பழனிச்சாமி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சாலையின் வலதுபுறமாக ஓட்டிவந்து கொண்டிருந்தவர் எதிர்திசையில் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் திடீரென வாகனத்தை திருப்பியபோது 1ம் எதிர்மனுதாரர் கார் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு விபத்தில் இறந்த பழனிசாமியின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் எந்த வகையிலும் பொறுப்பல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. இது காப்பீட்டு விதிமுறை மீறலாகும். மனுதாரர்களின் இருசக்கர வாகன உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனம் மனுவிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். அவர்களை மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டும். மேலும் இந்த இழப்பீட்டு மனுவானது திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் விபத்து நடந்து 6 மாதத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை. உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மேலும் மனுதாரர் சாந்தி மற்றும் இறந்த பழனிச்சாமியின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை சிகிச்சை விபரங்கள் ஆகியவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும், மனுதாரர்கள் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. மனுதாரர்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல, எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. **இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியவை**

| | |
|---|---|
| 1 | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது? |
| 2 | மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை கொடுக்க பொறுப்பானவர்கள் யார்? |
| 3 | எம்.சி.ஓ.பி.எண்.1265/2024ல் உள்ள மனுதாரர் சாந்திக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு? |
| 4 | எம்.சி.ஓ.பி.எண்.1265/2024ல் உள்ள விபத்தில் இறந்த பழனிசாமியின் வாரிசுதாரர்களான மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு? |

6. **பிரச்சனை1.**

இந்த இரண்டு மனுக்களிலும் உள்ள மனுதாரர்கள் இருவரும் ஒரே சாலை விபத்தில் காயமடைந்தவர்கள் என்பதால் ஒன்றாக வழக்கை விசாரணை செய்யுமாறு கூட்டு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளனர். அந்த குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனு எண்.1265/2024ல் இரண்டு மனுக்களுக்கும் பொதுவான சாட்சியம் விசாரிக்கப்பட்டுள்ளது மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் சாந்தி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 மனுக்களிலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.A.பூங்குழலி அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து பிறகு எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் 2 மனுக்களிலும் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராகக்கப்பட்டுள்ளார். 2 மனுக்களிலும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எம்.சி.ஓ.பி.எண்.1264/2024 மனுதாரர் சாந்தி என்பவரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆகும்.

எம்.சி.ஓ.பி.எண்.1265/2024ல் 1ம் மனுதாரர் சாந்தி விபத்தில் இறந்த பழனிசாமியின் மனைவி, 2 முதல் 4 மனுதாரர்கள் மகள் மற்றும் மகன்கள் ஆவார்கள்,

5ம் மனுதாரர் தாயார் ஆவார். விபத்தில் இறந்த பழனிசாமி மற்றும் மனுதாரர் சாந்தி கணவன் மற்றும் மனைவி ஆவார்கள். எம்.சி.ஓ.பி.எண்.1264/2024ன் மனுதாரர் மற்றும் எம்.சி.ஓ.பி.எண்.1265/2024ன் 1ம் மனுதாரர் சாந்தி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது மனு மற்றும் சாட்சியத்தில் தானும் தனது கணவரும் இருவரும் கடந்த 25.06.2023ம் தேதி மாலை சுமார் 05.45 மணியளவில் கீரம்பூர் – எர்ணாபுரம் மெயின் ரோடு, ரங்கப்பநாயக்கன்பாளையம், பிள்ளையார் கோவில் வளைவு அருகில், TN 28 BD 9997என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை விபத்தில் இறந்த பழனிசாமி என்பவர் ஓட்ட, மனுதாரர் சாந்தி பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தபோது, எதிர்திசையில் வந்த TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தனது கணவர் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநரின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும் என்று சாட்சியமளித்துள்ளார்.

விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1ல் TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து வழக்கை காவல்துறையினர் புலன்விசாரணை செய்து TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் சந்திரமோகன் என்பவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குற்ற இறுதியறிக்கை ம.சா.ஆ.5 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும் விபத்தின்போது மேற்படி காரை 1ம் எதிர்மனுதாரரே ஓட்டிச்சென்றுள்ளார் என்பது ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் 1ம் எதிர்மனுதாரர் TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட காரை மெதுவாகவும்,

கவனமாகவும், சாலைவிதிகளை பின்பற்றியும் ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்தபோது எதிர்திசையில் TN 28 BD 9997என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை இறந்த பழனிச்சாமி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வலதுகைபுறமாக ஓட்டிவந்து திடீரென திருப்பியபோது 1ம் எதிர்மனுதாரர் காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்திற்கு விபத்தில் இறந்த பழனிசாமியின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர்க்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை. இது காப்பீட்டு விதிமுறை மீறலாகும். மனுதாரர்களின் இருசக்கர வாகன உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனம் மனுவிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். அவர்களை மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டும். மேலும் இந்த இழப்பீட்டு மனுவானது திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் விபத்து நடந்து 6 மாதத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை. உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். ஆகையால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும் வாதம் முன்வைக்கப்பட்டது. மேற்படி சங்கதிகளை குறிப்பிட்டு எழுத்துமூலமான வாதுரையும் தாக்கல் செய்துள்ளனர்.

மனுதாரர்கள் தரப்பில் அதனை மறுத்தும் விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் மட்டுமே ஏற்பட்டது என்றும், காவல்துறையினர் மேற்படி விபத்து வழக்கை புலன்விசாரணை செய்து ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.5 குற்ற இறுதியறிக்கை 1ம் எதிர்மனுதாரர் சந்திரமோகன் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகையால் 1ம் எதிர்மனுதாரர் காரின் காப்பீட்டு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டு தனது வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் Malaravan Vs Praveen Travels Private Limited and others என்ற முன்தீர்ப்பை தாக்கல் செய்துள்ளனர்.

இருதரப்பு வாதங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்து நடந்த நாள் இடம், வாகனம் ஓட்டுனர் ஆகியவைகளை பொருத்தவரையில் இருதரப்பினருக்கும் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. இருந்தபோதிலும் விபத்து நடந்தமுறை தொடர்பாக வேறுபாடுகள் காணப்படுகிறது.

ம.சா.ஆ.1, ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்கள் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் விபத்து குறித்தும், விபத்து நடந்த விதம் குறித்தும் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக குறுக்கு விரணையில் சங்கதிகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ம.சா.1ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 சான்றாவணங்களிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனை முரண்படுத்தும் விதத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள், சம்பவ இடத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள முன்தீர்ப்பை பரிசீலனை செய்து பார்த்ததில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையானது விபத்து நடந்த அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் இம்மனுவானது திருத்தப்பட்ட மோட்டார் வாகன விதிமுறை மீறல் உள்ளது என்ற 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுகொள்ள தக்க வகையில் இல்லை. மனுதாரரின் சாட்சியத்தினை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர் தரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியத்தின் அடிப்படையிலும் 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் மட்டுமே இந்த விபத்து ஏற்பட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **<u>பிரச்சினை – 2</u>**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் TN 32 AE 4545 என்ற பதிவெண் கொண்ட கார் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ.9 பாலிசி நகல் ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 1ம் எதிர்மனுதாரரின் காருக்கு காப்பீடு 28.09.2022 முதல் 27.09.2023 வரை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விபத்து தேதியான 25.06.2023 அன்று 1ம் எதிர்மனுதாரரின் காருக்கு காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது. 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பிரச்சனை 1ல் முடிவு செய்துள்ளதால் மனுதாருக்கு வழங்கக்கூடிய இழப்பீட்டுத்தொகையை 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் வழங்கப்படவேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

8. **<u>பிரச்சனை– 3 எம்.சி.ஓ.பி.1264/2024 சாந்தி</u>**

விபத்து சமயத்தில் மனுதரார் சாந்தி வயது 46, விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்கும் வகையில் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்ய இயலாது. மனுதாரரின் காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ.10 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.11 காயச்சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.12 விடுவிப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார். மனுதாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு நாமக்கல் ஸ்ரீ அக்ஷயா மருத்துவமனையில் 29.06.2023 முதல் 10.07.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது ம.சா.ஆ.12 விடுவிப்பு சான்றிதழ் ஆகியவற்றில் இருந்து தெரியவருகிறது. மேற்படி விபத்தினால் மனுதாருக்கு தலை, இடுப்பு, கை மற்றும் காலில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளது மருத்துவ ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

மனுதாரர் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவாக ரூ.1,94,286/- செய்ததாக குறிப்பிட்டு ம.சா.ஆ.13 ஆவணம் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.13 ஆவணத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது மனுதாரருக்கு **மருத்துவ செலவாக** ரூ.1,94,286/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது ஆகும்.

மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்கு மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது **46%** ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட **நீ.ம.சா.ஆ.1** ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது.

மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **C.M.A.No.3453 of 2024, dated 21.04.2024 Ramasamy Vs New India Assurance Co.Ltd and others** என்ற வழக்கில்

> In the instant case, the accident had taken place in the year 2022. However, the Tribunal., whle adopting the per percentage method, has fixed only a sum of Rs.5.000/- per percentage for granting compensation undr the head 'disability'. As the year progress, the amount that is fixed per percentage must also increase considering the cost of living and therefore, this court is inclined to fix an amount of Rs.10,000/- per percentage.'

மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்மை மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | மனுதாரரின் ஊனத்திற்காக 46X 10,000 | ரூ.4,60,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ.1,25,000/- |
| 3 | ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ.5,000/- |
| 4 | சிகிச்சை சமயத்தில் உடன் இருந்தோர் செலவாக | ரூ.5,000/- |
| 5 | வருமான இழப்பிற்காக | ரூ.40,000/- |
| 6 | விபத்தினால் ஏற்பட்ட வசதி குறைவு | ரூ.1,00,000/- |

| | | |
|---|---|---|
| 7 | ஆடை அணிகலனுக்காக | ரூ.2,000/– |
| 8 | மருத்துவபில்கள் | ரூ.1,94,286/– |
| 9 | மருத்துவமனை சென்று வந்த போக்குவரத்து செலவு | ரூ.5,000/– |
| | மனுதாரருக்கு கிடைக்ககூடிய மொத்த இழப்பீட்டு தொகை | ரூ.9,36,286/– |

மனுதாரருக்கான ஒட்டுமொத்த இழப்பீட்டு தொகை ரூ.9,36,286/–ஐ 2 எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக, மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு**

(1) மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.9,36,286/– ஐ 2எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5% வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல.

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E–Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும்.

(5) 2ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தி வைக்கும் இழப்பீட்டு தொகையை மனுதாரர் கணக்கு வைத்துள்ள வங்கியில் E–Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

(6) மேற்படி தொகை முழுவதுமாக மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும்

(7) வழக்கறிஞர் ஊதியம் ரூ.17,863/– அவரது வங்கி கணக்கிற்கு E–Transfer மூலம் செலத்தி வைக்கப்படும் என்றும்

(8) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் ரூ.8,735/—ல் ஏற்கனவே செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுதரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

**மற்ற முக்கிய விவரங்கள்**

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | 27.08.2024 |
| மனு உத்தரவான தேதி | 21.07.2026 |
| மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை | ரூ.15,00,000/— |
| மனுவில் உத்தரவான இழப்பீட்டுத்தொகை | ரூ.9,36,286/— |
| முழு நீதிமன்றக் கட்டணம் | ரூ.8,735/— |
| முன்னரே செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம் | ரூ.20.00 |
| பாக்கி செலுத்தப்படவேண்டிய நீ.ம.கட்டணம் | ரூ.8,715/— |

**செலவுத்தொகைப் பட்டியல்**

| செலவு தொகை விபரம் | ரூ.பை. |
|---|---|
| இழப்பீட்டுத்தொகைக்குரிய முத்திரைக்கட்டணம் | 8,715.00 |
| வக்காலத்து | 10.00 |
| மனு தயாரிக்க | 200.00 |
| கட்டளை தயாரிக்க, சேர்ப்பிக்க | 50.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 17,863.00 |
| ஆதரவுகளுக்கான முத்திரை கட்டணம் | 20.00 |
| மொத்தம் | 26,858.00 |

7. <u>பிரச்சனை– 3 எம்.சி.ஓ.பி.1265/2024 (பழனிசாமி)</u>

விபத்தில் இறந்த பழனிசாமிக்கு விபத்து சமயத்தில் வயது 56 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.3ல் பழனிசாமியின் வயது 50 எனவும், ம.சா.ஆ.6 இறப்பு சான்றில் வயது 50 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் ம.சா.ஆ.6 இறப்பு சான்றிதழின்படி விபத்து சமயத்தில் விபத்தில் இறந்த பழனிசாமிக்கு வயது 50 என்பது தெரியவருகிறது. விபத்தில் இறந்த மனுதாரர் விபத்து சமயத்தில் விவசாய கூலி செய்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்து வந்ததாகக் மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள். விபத்தில் இறந்த பழனிசாமியின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்கும் வகையில் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்ய இயலாது.

மனுவில் சொல்லப்பட்டுள்ள விபத்தானது 25.06.2023ல் நடைபெற்றுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், ம.சா.ஆ.3 பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் ம.சா.ஆ.6 இறப்பு சான்றிதழின்படி இறந்து போன பழனிசாமி என்பவரின் வயது 50 என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை கருத்தில்கொண்டும் இறந்து போன பழனிசாமியின் தோராய மாத வருமானம் ரூ.15,000/– என இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்கிறது.

<u>**எதிர்கால கூடுதல் வருவாய்**</u> இறந்து போனவரின் வயது 50 மற்றும் அவரது பணியினை கருத்தில் கொண்டு எதிர்கால கூடுதல் வருவாயாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நேஷனல் இன்சூரன்ஸ் எதிர் பிரனாய்சேத்தி என்ற வழக்கில் கூறியுள்ள வழிகாட்டுதலின் படி எதிர்கால கூடுதல் வருவாய் 25% என எடுத்துக்கொள்ளப்படுகிறது.

<u>**சுய செலவினத்திற்கான கழிவு மற்றும் பெருக்கல் எண் கணக்கிடுதல்**</u>

ம.சா.ஆ.7 வாரிசு சான்றிதழின் படி இறந்து போன பழனிசாமியை சார்ந்திருப்பவர்கள் 5 நபர்கள் என்பது தெரிய வருகிறது. இதன் காரணமாகவும், இறந்த போனவரின் வயது 50 என்பதாலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் சரளவர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர் 2009(2) TNMAC 1 (SC) என்ற

வழக்கில் கூறியுள்ள படி சுய செலவினங்களுக்காக 1/4 ஐ கழித்து கொள்ளவும் பின்பு ஆண்டு வருமானத்தினை 13ல் ஆல் பெருக்கிட இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்சொன்ன விவரங்களின் அடிப்படையில் கணக்கிடும் போது வரும் 15,000 + 3,750 = 18,750 – 4,688 = 14,062 X 12 = 1,68,744 X 13 = ரூ.21,93,672/– என்பது மனுதாரர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்பாக தீர்மானிக்கப்படுகிறது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நேஷனல் இன்சூரன்ஸ் எதிர் பிரனாய்சேத்தி 2017(16) SCC 680 என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி இம்மனுவின் 1வது மனுதாரர் வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பு (spousal consortium) என்ற தலைப்பில் ரூ.40,000/–மும், 2 முதல் 4ம் மனுதாரர்களுக்கு (Parental consortium) என்ற தலைப்பில் தலா ரூ.40,000/– (ரூ.40,000/–x3 = ரூ.1,20,000/–) மும், 5 மனுதாரர்க்கு (Fillial consortium) என்ற தலைப்பில் தலா ரூ.40,000மும், அடுத்ததாக மனுதாரர்கள் அனைவரும் பொதுவாக இறுதி சடங்கு செய்த செலவிற்காக ரூ.18,000/–மும், அறிவு சார்வு சொத்து இழப்பு ( Loss of Estate) என்ற தலைப்பில் ரூ.15,000/–மும் பெற உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். இதன்படி மொத்த தொகையான (40,000 + 1,20,000 + 40,000 + 18,000 + 15,000) ரூ.2,33,000/– என வரும் தொகையினை மேற்சொன்ன தலைப்புகளின் கீழ் இழப்பீடாக மனுதாரர்கள் பெற உரிமையுள்ளவர்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வருமான இழப்பு | ரூ.21,93,672/– |
| 2 | வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பு | ரூ.40,000/– |
| 3 | Parental consortium | ரூ.1,20,000/– (ரூ.40,000/–x3 =) |
| 4 | Fillial consortium | ரூ.40,000/– |
| 5 | இறுதி சடங்கு | ரூ.18,000/– |
| 6 | அறிவு சார்வு சொத்து இழப்பு | ரூ.15,000/– |
| | **மனுதார்களுக்கு கிடைக்கக் கூடிய மொத்த இழப்பீட்டு தொகை** | ரூ.24,26,672/– |

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் மொத்த எதிர்கால வருவாய் இழப்பு மற்றும் ஏனைய தலைப்புகளின் கீழ் சேர்த்து மொத்த இழப்பீடான ரூ.24,26,672/- தொகையை இறந்து போனவரை சார்ந்திருக்கும் மனுதாரர்கள் பெறத்தக்க தகுதியானர்வர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

(1) 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் 1 முதல் 5 மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.24,26,672/-ஐ செலுத்தவேண்டும்.

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி மற்றும் செலவு தொகை சேர்த்து 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு 1 முதல் 5 மனுதாரர்களுக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல என்றும்

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E-Transfer மூலம் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தியதற்கான வங்கிக்கு அனுப்பிய அறிவுரையினை நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும்.

(5) மேற்படி இழப்பீட்டு தொகையினை பொருத்தவரையில் 1ம் மனுதாரருக்கு ரூ.13,76,672/-மும் 2 முதல் 4 மனுதாரர்களுக்கு தலா ரூ.3,00,000/- ( ரூ.3,00,000/- X 3 = ரூ.9,00,000/-) ம் வீதமும், 5ம் மனுதாரர்க்கு ரூ.1,50,000/- மும் அந்த தொகைகளுக்கு உரிய வட்டி சேர்த்து வரும் தொகையினை பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும், 1 முதல் 5 மனுதாரர்கள் மனு தாக்கல் செய்வதன் மூலம் தங்களது வங்கிக் கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டுமெனவும்,

(6) வழக்கறிஞர் ஊதியம் ரூ.32,767/- அவரது வங்கி கணக்கிற்கு E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும்.

(7) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் நீ.ம.க.ரூ.23,639/—ல் ஏற்கனவே செலுத்தியது போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

<u>மற்ற முக்கிய விவரங்கள்</u>

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | 27.08.2024 |
| மனு உத்தரவான தேதி | 21.07.2026 |
| மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை | ரூ.20,00,000/— |
| மனுவில் உத்தரவான இழப்பீட்டுத்தொகை | ரூ.24,26,672/— |
| முழு நீதிமன்றக் கட்டணம் | ரூ.23,639/— |
| முன்னரே செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம் | ரூ.20/— |
| பாக்கி செலுத்தப்படவேண்டிய நீ.ம.கட்டணம் | ரூ.23,619/— |

<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>

| செலவு தொகை விபரம் | ரூ.பை. |
|---|---|
| இழப்பீட்டுத்தொகைக்குரிய முத்திரைக்கட்டணம் | 23,639.00 |
| வக்காலத்து | 10.00 |
| மனு தயாரிக்க | 200.00 |
| கட்டளை தயாரிக்க, சேர்ப்பிக்க | 50.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 32,767.00 |
| ஆதரவுகளுக்கான முத்திரை கட்டணம் | 45.00 |
| மொத்தம் | 56,711.00 |

என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்துதட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21–ஆம் தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.

K THANGAMANI Digitally signed by K THANGAMANI Date: 2026.07.21 17:21:58 +0530

சார்பு நீதிபதி,
(முன்னிலை அலுவலர்)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்,
நாமக்கல்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 – சாந்தி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | விபத்து பதிவேடு |
| ம.சா.ஆ.3 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| ம.சா.ஆ.4 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| ம.சா.ஆ.5 | குற்ற இறுதி அறிக்கை |
| ம.சா.ஆ.6 | இறப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.7 | வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.8 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை |
| ம.சா.ஆ.9 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு பாலிசி |
| ம.சா.ஆ.10 | விபத்து பதிவேடு |
| ம.சா.ஆ.11 | காயச்சான்றிதழ் |
| ம.சா.ஆ.12 | விடுவிப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.13 | மருத்துவபில்கள் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

நீ.ம.சா.ஆ.1 – ஊனச்சான்று (சாந்தி)

K THANGAMANI Digitally signed by K THANGAMANI Date: 2026.07.21 17:22:07 +0530

சார்பு நீதிபதி,
(முன்னிலை அலுவலர்)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்,
நாமக்கல்.

| | |
|---|---|
| | FAIR/DRAFT<br>MCOP No.1264/2024 C/w.1265/2024<br>Dated : 21.07.2026 |